# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1641/29 - 2010 පෙබරවාරි 17 වැනි බදාදා - 2010.02.17

*1641/29 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

*மதுவரி அறிவித்தல் 913*

**மருந்துப்பொருள் தயாரிப்புகளின் உற்பத்திக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படுவதுடன் பிற வழக்குத் தொடருதல் நடவடிக்கைகளுக்காகவும் ஸ்பிரித்து (ஏதைல் மதுசாரம்) மீதான தீர்வை**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும், காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 22 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ் சனாதிபதியினால் இந்தக் கட்டளை ஆக்கப்படுகின்றது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு,*
*2010, பெப்புருவரி 16.*

**கட்டளை**

*1. இதனகத்துக் குறிப்பிடப்பட்டுள்ள நிரல் I இல் குறிப்பீடு செய்யப்பட்ட பொருட்கள் மீதான தீர்வை, அவ்வட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட விகிதத்தில் 2010.02.18 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் விதிக்கப்படுதல் வேண்டும்.*

*2. ஏதேனும் பிற அறிவித்தல்களுக்கு எதுவும் முரண்படாத வகையில் அத்தகைய ஸ்பிரித்து (எதைல் மதுசாரம்) இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது உள்ளூர் உற்பத்தியாளரிடமிருந்து விடுவிக்கப்படும் பொழுது இத் தீர்வைகள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

*3. 2007, திசெம்பர் 3 ஆந் திகதிய 1526/1 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மதுவரி அறிவித்தல் 901 இத்தால் நீக்கப்படுகின்றது.*

### அட்டவணை

| | நிரல் I<br>பொருட்கள் | நிரல் II<br>தீர்வை விகிதம் |
|---|---|---|
| 1. | மதுவரி செலுத்தப்பட வேண்டிய உரிமம் வழங்கப்பட்ட குடிபான மதுசாரம் தயாரிப்பாளர்களினால் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறு கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், வைத்திய சாலைகள் மற்றும் அரசாங்க திணைக்களங்களினால் பயன்படுத்தப்படும் ஸ்பிரித்து (எதைல் மதுசாரம்) | இல்லை |
| 2. | முடிவுப்பொருள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங் களினால் இலங்கைக்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படும் கைத்தொழில் நோக்கங்களுக்கான புரூப் ஸ்பிரித்து 20 சதவீதத்திற்கு அதிகரிக்காத மருந்துப்பொருள் தயாரிப்புக்கான உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் ஸ்பிரித்து (எதைல் மதுசாரம்). | லீட்டர் ஒன்று இருநூறு ரூபா ( 200 ரூபா) |
| 3. | பிற ஏதேனும் நோக்கங் களுக்காக பயன்படுத்தப்படும் ஸ்பிரித்து (எதைல் மதுசாரம்) மாதமொன்றுக்கு ஆகக்கூடியது 20,000 லீட்டர்கள் வரை. | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் பயன்படுத்தப் படும் ஸ்பிரித்து (எதைல் மதுசாரம்) மாதாந்த வரையறை 20,000 லீட்டர்களுக்கு அதிகமான போது | லீட்டர் ஒன்று ஐநூறு ரூபா ( 500 ரூபா) |

3-194

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.